**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| | | | |
|---|---|---|---|
| 2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2–ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண்.44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி உதவியாளர் திருமதி. பாண்டிச்செல்வி என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | **விஜயராணி** | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**02.04.2026 OS.57/2020 வா.சா.1. விஜயராணி**

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**:

1) என்னிடம் காட்டப்படும் ஆவணமானது விஸ்வலிங்கம் கிரையம் வாங்கிய விவரங்கள் அடங்கிய வில்லங்கச்சான்று என்றால் சரிதான். மேற்படி வில்லங்க சான்றிதழில் விஸ்வலிங்கம் புல எண்.6/10ஐ கிரையம் வாங்கியதாக கண்டுள்ளது என்றால் சரியல்ல. விஸ்வலிங்கம் தாவா சொத்தை கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் கிரையப்பத்திரத்தை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் மேற்படி விஸ்வலிங்கம் கிரையம் வாங்கிய பத்திரத்தை தாக்கல் செய்து வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4 பத்திரத்தில் மேற்கு நான்குமாலாக பிரதிவாதிகளின் தாயாரான வள்ளியம்மையின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்கே தற்போது பழையனூர் கால்வாய் தான் உள்ளது.

2) விஸ்வலிங்கம் புல எண். 6/2, 6/3 ஐ கிரையம் வாங்கவில்லை என்றாலும் புல எண்.6/10ஐ தான் கிரையம் வாங்கினார் என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சோணை வகையறாவிடமிருந்து புல எண்.6/2, 6/3 ஐ தான் கிரையம் வாங்கினேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 ஆவணமானது விஸ்வலிங்கத்திடமிருந்து சோணை கிரையம் வாங்கிய பத்திரத்தின் சான்றிட்ட நகல் என்றால் சாட்சி ஆவணத்தை படித்துப் பார்த்து அதில் என்ன எழுதியுள்ளது என எனக்கு புரியவில்லை என சாட்சியம் அளிக்கிறார். நான் வழக்கிற்காக நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்தையே புரியவில்லை என பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் நான் தாக்கல்

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.04.02 14:22:25 +0530

செய்துள்ள வா.சாஆ.5 ஆவணத்தில் மேற்குப்பக்க நான்குமாலாக பிரதிவாதிகள் பெயர் குறியிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் எந்த தேதியில் சோணையிடமிருந்து தாவா சொத்தை கிரையம் வாங்கினேன் என்றால் 22.03.2006 ம் தேதியில் கிரையம் வாங்கினேன். நான் கிரையம் வாங்கிய மேற்படி தேதியிட்ட ஆவணத்தை சமூக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்திலும் மேற்கு நான்குமாலாக புல எண்.6/3 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்கே பழையனூர் கால்வாய்தான் உள்ளது. எனது தங்கையின் கணவர் பத்திர பதிவுத்துறையில் பணியாற்றினார் என்றால் சரிதான். அவர் சிவகங்கையில் பணியாற்றினார். புல எண்.6ல் எத்தனை உட்பிரிவுகள் ஏற்பட்டுள்ளது என எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு நான் கிரையம் வாங்கிய சொத்து மட்டும் தான் தெரியும். மேற்படி புல எண்.6ல் 6/1 முதல் 6/3 வரை உட்பிரிவு ஆகியுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. புல எண்.6/1ல் 16 செண்ட் விஸ்தீரணம் நாளது தேதிவரை பூச்சியாப்பிள்ளை மற்றும் 2 நபர்கள் பெயரில் உள்ளது என்றால் நான் 6/2, 6/3ஐ தான் கிரையம் வாங்கினேன். புல எண்.6/1 ஐ பற்றி எனக்கு தெரியாது.

3) விஸ்வலிங்கம் புல எண். 6/2, 6/3ஐ கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் தேதிக்கு 18 ஆண்டுகளுக்கு முன்பாகவே 1963ம் ஆண்டில் எனது மாமானார் எனது மாமியார் பெயரில் புல எண். 6 ல் ஆவண எண். 500/1963 மூலமாக 1 ஏக்கர் 24 செண்டை கிரையம் வாங்கியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 19.08.1994ம் தேதியில் ஆவண எண். 1030/94 மூலம் எனது மாமியார் எனது கணவருக்கு ஒரு இனாம் செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1994ம் வருடம் எனது மாமியார் ஆவண எண். 1035/94 மூலம் புல எண். 6/3ல் 1 ஏக்கர் 24 செண்ட்டை பிரதிவாதிகளுக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்து நாளது தேதிவரை பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. உண்மையில் விஸ்வலிங்கம் புல எண். 6/10ஐ தான் கிரையம் வாங்கினார் என்றாலும் எனது கணவர் வருவாய்துறையில் பணியாற்றியதாலும் எனது தங்கையின் கணவர் பதிவுத்துறையில்

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.04.02 14:22:33 +0530

பணியாற்றியதாலும் அதிகாரத்தை பயன்படுத்தி 6/2, 6/3 ஐ விஸ்வலிங்கம் சோணைக்கு பத்திரபதிவு செய்துள்ளதாக ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. சோணை எனது வீட்டில் பணியாற்றியதன் அடிப்படையில் அவர் பெயரில் போலியாக பத்திரம் ஏற்படுத்தி அதன்பிறகு மேற்படி சோணையிடமிருந்து எனது பெயருக்கு பத்திரம் ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. எனது கணவர் அரசு ஊழியர் என்ற அடிப்படையில் எனது பெயரில் அவர் கிரையம் வாங்கினாலும் மேல் அதிகாரிகளிடம் உரிய அனுமதி பெற்றுதான் வாங்க வேண்டும் என்றால் தாவா சொத்தை எனது தந்தை எனக்கு கிரையம் வாங்கிக் கொடுத்தார். நான் தாக்கல் செய்துள்ள பிராதில் தாவா சொத்தை எனது தந்தை எனக்கு கிரையம் வாங்கி கொடுத்தாக எந்த இடத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

4) நான் அரசாங்கத்தை ஏமாற்றி எனது நாத்தனார் பெயரில் உள்ள சொத்தை எனது பெயருக்கு பட்டா மாற்றி வைத்துக்கொண்டு தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பிராதில் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**( மறுவிசாரணை இல்லை).**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.04.02 14:22:40 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam